தொகுதி- ௫௬

பகுதி- ௬

Vol. 56

No. 6

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி—புரட்டாசி

SEPTEMBER-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. அடைக்கலக்காதை ஆராய்ச்சி 161
வித்துவான் நா. இராமையா பிள்ளை, எம். ஏ.,

2. குறிஞ்சிச் செடி 167
வி. ப. கா. சுந்தரம் எம். ஏ.,

3. மழை மு. வைத்திலிங்கம், ஒலகடம். 176

4. மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு 177

5. இன்பச் சோலை 183
புலவர் இரா. இளங்குமரன்

6. இளம்பூரணர் எழுத்துரை 184
வித்வான் ஆ. சிவலிங்கனுர், மயிலம்.

7. மாணவர் பகுதி. (வெண்பா) 190

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருசு	திருவள்ளுவர் ஆண்டு 1991	பகுதி. சு
Vol. 56	சார்வரி-புரட்டாசி 1960 — September	No. 6

அடைக்கலக் காதை ஆராய்ச்சி

வித்துவான். நா. இராமையாபிள்ளை, M. A.

அடைக்கலக் காதை என்பது சிலப்பதிகாரக் கண்ணகியை இடைக்குல மடந்தையாகிய மாதரியிடம் அடைக்கலமாக ஒப்படைப்பதைக் கூறுவதாகும்.

இக்காதையில் வருவன: (1) மதுரையின் காட்சியையும் பாண்டியனின் கொற்றத்தையும் கண்டுவந்த கோவலன் உறையூரிலிருந்து தம்மோடு வந்த கவுந்தியடிகளுக்கு எடுத்துச் சொல்லுதல். (2) அவ்வாறு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்குமிடத்தில் மாடல மறையவன் என்பவன் வந்துசேர அவனைக் கோவலன் சென்று அடிவணங்குதல் (3) கோவலன் செய்த அறங்களைப் பாராட்டிய மாடல மறையவன், கோவலன் மனைவியுடன் மதுரைக்கு வந்தது குறித்து இரக்கப்படுதல் (4) கோவலன் தான் கண்ட கனவினைக் கூறுதல் (5) கோவலன் மனைவியோடு புறச்சிறையிருத்தல் கூடாது என்று கவுந்தியும் மாடலனும்

கூறுதல் (6) மாதரியிடம் கண்ணகியைப் பாராட்டி அடைக்கலமாகக் கொடுத்தல் (7) கண்ணகியை அழைத்துக் கொண்டு மாதரி தன் இல்லத்திற்கு மாலையில் செல்லுதல். இந்த ஏழு செய்திகளையும் இக்காதை விளக்குவதோடு கோவலனின் வீரம், ஈகை, அறிவு, அருள் இவைகளையும் விளக்குகின்றது. இன்னும் அடைக்கலப் பொருளின் மேன்மை பற்றிக் குரங்குக் கைவானவன் வரலாறு விரித்துரைக்கப்படுகிறது.

சிலப்பதிகாரப் பெருங் காப்பியத்தின் தலைவன் பெருமைகள் எல்லாம் இக்காதையில் சொல்லப்படுகின்றன. அவற்றையடுத்துப் பெருங்காப்பியத்தின் தலைவி கண்ணகியின் பெருமைகளும் உரைக்கப்படுகின்றன. இன்னும், இல்லறத்தாரின் உயர்வும் மற்றையாரின் உயர்வின்மையும் இங்கேயே விளக்கப்படுகின்றன.

அடைக்கலக்காதையின் தொடக்கத்தில் பாண்டியனின் செங்கோலையும் மதுரை நகரின் மாண்பையும் மாதவத்தாட்டிக்குக் கோவலனே கூறுகின்றான். பாண்டிய நாட்டிலுள்ள வேங்கை முதலிய அஃறிணை உயிரினங்களும் "உறுகண் செய்யா" என்றும், "செங்கோல் தென்னவர் காக்கும் நாடு" என்றும் சொல்லப்படுவனவற்றிலிருந்து பாண்டிய நாடு செங்கோல் செலுத்தப்படும் நாடு என்பது போதரும். நாடே அவ்வாறிருந்தால் அரசன் இருக்கும் கோநகரம் எவ்வளவோ மேன்மையுடன் இருக்க வேண்டுமே? அப்படிப்பட்ட நகரத்தில் கண்ணகி அடைக்கலப் பொருளாகக் கொடுக்கப்படுவதேன்? அந்நகரத்திற்குத் தன் மனைவியோடு வந்த கோவலனைப் பார்த்து, "திருத்தகு மாமணிக்கொழுந்துடன் போந்தது உம்மைப் பயன்கொல்" என்று மாடலன் கூறுவது ஏன்? இவை சிந்திக்கத்தக்கன. "உம்மைப் பயன் கொல்" எனின் விடுத்து மேலே செல்வோம்.

அடைக்கலக் காதையில் ஒன்றுக்கொன்று முரணான நிகழ்ச்சிகள் நிகழ்வதை இளங்கோவடிகள் நமக்குக் காட்டுகின்றார். அரசன் தலைநகரம், 'பதியெழு அறியாப்பண்பு மேம்பட்ட மாநகர்'' என்று போற்றப் படுவதைக் கேட்ட கவுந்தியடிகள், அது சரியென்றோ, தவறென்றோ கூறினாரில்லை,

மாடல மறையவன் தன்னை வணங்கிய கோவலனைப் பார்த்து அருள்வீரன் என்றும், தொலையாத செல்வம் உடையவன் என்றும், வறியோர் தலைவன் என்றும் புகழ்ந்து விட்டு, மதுரைக்கு மனைவியோடு வந்தது குறித்து வருந்துகிறான். மாதவி மகளுக்குப் பெயரிடும் பொழுது மறையவன் ஒருவன் யானையின் கையில் சிக்க, அவனைக் கோவலன் மீட்டியதும், அந்தணன் ஒருவனின் மனைவிக்குக் கோவலன் நிரம்பிய செல்வம் கொடுத்ததும், மகனை இழந்த ஒருத்திக்கும் அவளைச் சேர்ந்த உறவினர்களுக்கும் கோவலன் பல ஆண்டுகள் பொருள் கொடுத்து வந்ததும் மாடலமறையவனால் போற்றப்படும் செய்திகள். அவ்வாறான செயல்கள் கண்ணகியோடு இல்லறம் நடத்தும்போது செய்திருந்தால் மேன்மையாயிருந்திருக்குமென்றும் நாடகக் கணிகை மாதவியோடு வாழ்ந்த காலத்தில் அவை செய்யப்பட்டதால் மிக்க மேன்மையடைய வில்லையென்றும் நாம் உய்த்துணர இளங்கோ நமக்கு விடுகிறார்.

கோவலன் தன் தீக்கனவைக் கூறி வருந்திய பொழுது அவனுக்குக் கவுந்தியடிகளோ மாடலனோ ஆறுதல் கூறினாரில்லை. அவ்வாறு கூறாததோடு புறச்சிறை இருக்கையிலிருந்து மனைவியோடு அகன்று போகவேண்டுமென்று இருவரும் ஒருங்கு கூறுகின்றனர். இதைக் காட்டிலும் கடுமையான நிகழ்ச்சி வேறு என்ன இருக்க முடியும்? அவ்வழியே தற்செயலாக வந்து சேர்ந்த மாதரியிடத்தில் கண்ணகியை

அடைக்கலமாகக் கவுந்தி அடிகள் ஒப்படைக்கின்றார். இவை பற்றி ஆராய்தல் வேண்டும்.

காப்பியத்தின் தலைவன் தலைவியின் பெருமையை எடுத்துக் கூறிய இளங்கோவடிகள் அவர்களுக்கு ஏற்படும் சிறுமையையும் வருபொருள் உரைப்போன்போலக் குறிப்பாகச் சுட்டுகின்றார். கோவலன் கொலையுண்டு மாண்டுபோவதை அவன் கனவு மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

எவ்வளவோ அறத்திலும் ஆண்மையிலும் அருளிலும் மேம்பட்டவன் கோவலன் என்று மாடலன் கூறுகிறான். அம்மாடலனையே கோவலன் அடிவணங்குகின்றான். வணங்கித் தனக்குவரும் தீங்கை எடுத்துரைக்கின்றான். இவ்வாறு காப்பியத் தலைவன் உயர்வையும் தாழ்வையும் இளங்கோவடிகள் கூறுகின்றார்.

இனி, கண்ணகியின் சிறப்பைக் கவுந்தியடிகள் மாதரிக்கு எடுத்துக் கூறுகிறார். பின்பு கண்ணகியை அடைக்கலப் பொருளாக மாதரியிடமே தருகிறார். இவ்வாறு இளங்கோவடிகள் காப்பியத்தலைவியின் உயர்வையும் தாழ்வையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். காப்பியத் தலைவியாக இருந்தவள் சாதாரணக் குடிமகள் மாதரியிடம் அடைக்கலமாகத் தரப்படுவது கண்ணகிக்கு ஏற்படப்போகும் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

கவுந்தியடிகளும் மாடலனும் சேர்ந்து, கண்ணகியும் கோவலனும் புறச்சிறையிருக்கையில்தங்கக்கூடாதென்றும், ஞாயிறு சென்று மறைவதற்கு முன்பு மதுரை புகவேண்டுமென்றும், இரக்கமற்ற உள்ளத்தோடு கூறுகின்றனர். நட்பு என்பது இடுக்கண் வந்து உற்ற காலை அடுத்து நின்று களைவதல்லவா! கவுந்தியடிகளும் மாடலமறையவனும்

"அழிவின் கண் அல்லல் உளப்பதாம் நட்பு" என்பதற்கு இலக்கானவர்கள் இல்லையா?

உறையூரிலிருந்து கண்ணகிக்கு உறுதுணையாய் வந்து கண்ணகியைக் "கற்புக் கடம்பூண்ட தெய்வம்" என்று பாராட்டிய கவுந்தியடிகள் இரக்கமில்லாமல் கோவலனைப் பார்த்து, "நின் இருப்பு இங்கு ஒழிக" என்று கூறுவது பொருந்துமா?

புகார் நகரத்தை அடுத்து வாழ்ந்து, அடிக்கடி கோவலனைக் கண்டு, அவன் கொடைப்பொருள் பெற்று, அவனோடு நட்புப்பூண்டு, மறைகளைக் கற்றுணர்ந்த மாடலன் வேற்று நாட்டிலே தன் நண்பன் கோவலனைக் கண்டபோது உடனிருந்து மகிழ வேண்டுமென்று நினையாது, "ஒழிக நின் இருப்பு" என்று கூறுவது பொருந்துமா?

(1) "அறத்து உறை மாக்கட்கு அல்லது, இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது........."

(2) "......... இங்கு ஒழிக நின் இருப்பு"

(3) "காதலி தன்னோடு கதிர் செல்வதன் முன்
மாட மதுரை மாநகர் புகுக — என
மாதவத்து ஆட்டியும் மாமறை முதல்வனும்
கோவலன் தனக்குக் கூறுங் காலை—"

என்பன காண்க.

கவுந்தியும் மாடலனும் கோவலன் கண்ணகிக்கு வரும் தீங்கை எண்ணி இவ்வாறு கூறினார்கள் என்றால், அவர்கள் உண்மை நட்பினர் அல்லர். "ஊழையும் உப்பக்கங்" காணும் உறுதியுடையவரும் அல்லர். ஆகவே அவர்களிருவரும் வள்ளுவர் கூறும் உறுதிப்பாட்டிற்கு உரியவர் ஆகார்.

கவுந்தியடிகள் ஒருமாதவத்தாட்டி; "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்" ஆவர். பிறர் கருமம் பற்றி அவர் கருத்துக் கொள்ள முடியாதவராயிருப்பார். எனவே தான் கவுந்தியடிகள் இவ்வாறு கூறினர் போலும்.

மாடலன் என்பவன் ஒரு மாமறை முதல்வன். மாமறை ஓதி உணர்பவர் பிறருக்கு எடுத்துச் சொல்வர். தாம் சொல்வது போலத் தாமே செய்யவேண்டுமென்பது எல்லோரிடத்திலும் இருக்கக்கூடிய இயல்பன்று. எனவே தான் மாடல மறையோன் அவ்வாறு கூறினான் போலும்,

இவர்கள் இருவரும் பிறர்க்கென வாழும் பெருந்தகையாளர்கள் இல்லை என்பதை இளங்கோவடிகள் நமக்கு எடுத்துக் காட்டுகிறார். இவர்கள் இருவரும் அவ்வாறு கூறி முடித்த பின்பு அங்கு மாதரி என்னும் இடைக்குல மடந்தை வந்தாள். அவளிடத்தில் கண்ணகி அடைக்கலமாக்கப்பட்டாள். இல்லறத்தாளாகிய மாதரி எஞ்ஞான்றும் கண்ணகியைப் பற்றி அறியாதவள். கவுந்தியடிகள் கூறியதைக் கேட்டு அவள் கண்ணகியை அன்போடு அழைத்துச்சென்று ஆதரித்த செய்தி, இல்லறத்தார் என்றும் பிறர்க்கென வாழுவர் என்பதைக் காட்டுகிறது. வேளாண்மை அவர் நோன்பல்லவா! "மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" யல்லவா!

கவுந்தியடிகள் பெண்ணாய்ப் பிறந்து முற்றுந் துறந்து மாதவத்தாட்டியாய் வாழ்ந்தாலும், மாடலன் ஆணாய்ப் பிறந்து மாமறை கற்று மறையவனாய் வாழ்ந்தாலும், இடைக்குல மடந்தையாய்ப் பிறந்து இல்லறத்தாளாய் வாழும் மாதரிக்கு இணையானவர் இல்லை–என்று இளங்கோ காட்டுகிறார். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" யல்லவா!

குறிஞ்சிச் செடி

[வி. ப. கா. சுந்தரம், M. A., அமெரிக்கன் கல்லூரி.]

பண்டைக் காலத் தமிழறிஞர் நிலத்தின் வளம் நோக்கி, உலகினை நான்காகப் பிரித்தனர். மலைஉலகம், காடுநிறை உலகம், நீர்ப்பயிர் நிறை உலகம், கடல்சார்ந்த உலகம் என நான்காகப் பிரித்தமையால், உலகிற்கு நானிலம் எனப் பெயராயிற்று. நீர் நிழலற்ற, பயிர் பச்சையற்ற பாலை நிலம் மக்கள் உழைப்பிற்கு உதவாமையால் இந்த நான்கு நிலங்களுடன் அதனைக் கூட்டவில்லை. இதிலிருந்து, மனித முயற்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் பண்டைத் தமிழர் மிக்க மதிப்புக் கொடுத்தனர் என்பது தெளிவாகிறது.

இந்நால்வகைப் பகுப்பில், மலையும் மலைசார்ந்த நிலமும் குறிஞ்சி எனப் பெயர் பெற்றது. ஓங்கி யுயர் மலைச் சிகரங்களில் கரும் நீலப் பெருமேகங்கள் எங்கும் தவழ்ந்து, மழைபொழிந்து நிலம் குளிர்ந்து நிலவச் செய்யும் பச்சைப் பசேல் எனப் பசும் போர்வை போர்த்தாலென, மரம் செடி கொடிகள் துளிர்த்துத் தளிர்த்து அடர்ந்து காட்சியளிக்கும். இளம் ஞாயிறு இனிய செவ்வொளியை எங்கும் பரப்பும். தத்தம் இனத்தொடு மயில் ஒயிலாடும். மான் தாவி ஓடும். மந்தி மரங்களில் சாடும். கிளிகள் பாடும். யானைகள் கூடும். பல் நிற மலர்கள் நல்மணம் நாற்றிசையும் பரப்பும். இத்தகைய எழில்மிக்க இயற்கைக் காட்சிகளும் இன்பச் சூழ்நிலைகளும் காதலுணர்வைக் கனியச் செய்யும். எனவே, புணர்ச்சிச் செயலை வர்ணிக்கும் புலவர்கள் குறிஞ்சிச் சூழ்நிலையில் நிகழ்வதாகக் கூறுவர்.

குறிஞ்சி எனும் பெயர்ப்பொருள்:-

தழுவுகின்ற செயலே தழிஞ்சி எனப் பெயர் பெற்றது என நச்சினுர்க்கினியர் விளக்கினர். கொழுமையை யூட்டுவதால் 'கொழிஞ்சி' என ஒருவகை உரச்செடி பெயர் பெற்றது. நெரிப்பதால் (குத்துவதால்) நெரிஞ்சி என ஒருவகை முள் பெயர் பெற்றது. தழுவுதல் தழிஞ்சி எனவும், நெரிப்பது நெரிஞ்சி எனவும் ஆவதுபோல, குறுகுதல் குறிஞ்சியாகும். குறுகுதல் என்பதற்கு, நெருங்குதல், அணுதல், சேர்தல், இணைதல், புணர்தல் எனப் பொருள் கூறலாம். குறுகுதல் என்பது நெருங்குதல் எனப் பொருள்படுவதை வள்ளுவர் குறளாலும் அறியலாம்.

''நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றுள் இவள்'' (*1104*)

இக்குறளில் குறுகுங்கால் என்பது நெருங்கிச் சேருங்கால் அஃதாவது புணருங்கால்—எனப் பொருள்படும். எனவே, குறுகுதல் (நெருங்கிப் புணர்தல்)எனும் பொருள் கொண்ட தொழிற் சொல். 'குறிஞ்சி'. இது காரணத்தொழிற் பெயர். (இவ்வாறே முல்லை, மருதம் முதலிய திணைப் பெயர்கட்கும் பொருள் உண்டு என்பதை மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ் 55–10 பகுதியில் காணலாம்.)

குறிஞ்சி, முல்லை முதலிய சொற்கள் முதலில் ஒழுக்கத்தைக் குறித்தன என்றே புலவர்மெச்சும் நச்சினுர்க் கினியரும் மிக்கப் புலமை நக்கீரனுரும் தெளிவுறுத்தியுள்ளனர்.

மேலும் நுழைபுல மிக்க மழைநலப் புலவர் நாவலர், டாக்டர் சோமசுந்தர பாரதியார் தாம் எழுதிய அகத்திணையுரையில் இதனைப் பல இடங்களில் வற்புறுத்தியுள்ளனர். "முதலில் ஒழுக்கங்கட்கே யுரிய குறிஞ்சி முதலிய பெயர்கள் பின் நிரலே அவ்வொழுக்கங்கட்குச் சிறந்துரிய நிலங்கட்கும்

ஆகுபெயராய் வழங்கலாயின. அவை நிலங்களுக்கே யுரிய பெயர்கள் எனல் பிற்காலப் பிறழ்வுணர்ச்சி'' என்று தெளி வூட்டிச் சென்றனர். எனவே முதலில் புணர்தல் ஒழுக்கம் குறித்த குறிஞ்சி எனும் பெயர் ஆகுபெயராக, மலைநிலத் திற்கும், குறிஞ்சிச் செடிக்கும், குறிஞ்சிப் பண்ணிற்கும் வழங்கலாயிற்று.

மேலைநாட்டில் காதலர்கள் ஒருவரை ஒருவர் பிரியுங்கால் 'Forget me not' எனச் சொல்லிப் பிரிவது வழக்கமாயிருந் தது. பின்னர் இச்சொற்களைத் தெரிவிக்கக் குறியீடாக ஒரு பூவை வழங்கினர். அப்பூவிற்கு, 'Forget me not' எனப் பெயரிட்டனர். இங்குச் செயல் முந்தியதாகவும், அதனைக் குறிக்கும் குறியீடு பிந்தியதாகவும் அமைந்தது போலவே புணர்ச்சிச் செயலைக் குறிக்கும் அடையாளமாகக் குறிஞ்சி யைப் பின்னர் பயன்படுத்தினர். மலையில் எத்தனையோ வகை வகையான பூக்கள் அழகழகாக விளங்கப், புணர்தல் ஒழுக்கத்தைக் குறிப்பதற்குக் குறிஞ்சிச் செடியை மட்டும் அடையாளப் பூவாக அமைத்ததற்குக் காரணம் இருத்தல் வேண்டுமல்லவா? ஆம். காரணமுண்டு. அவற்றைக் காணு தற்கு முன், குறிஞ்சி வளர்தல், மலர்தல், பயன்படுதல் முத லியவற்றைப் பற்றி விரிவாக அறிவோம்.

தாவரக் குடும்பச் சார்பு:—

செடி நூலினர் (Botanists) குறிஞ்சிச் செடியை ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானஸ் (Strobilanthes Kunthianus) என்பர். இது அக்காந்தேசி (acanthaceac) எனும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. ஆடாதோடை, கனகாம் பரம், நாகமல்லிகை, நீர்முள்ளி முதலிய செடிகள் இக்குடும் பத்தனவே. குறிஞ்சி இரண்டு மூன்றடி உயரம் மட்டும் வளர்வதால், செடி எனல் பொருந்துமேயன்றி மரம் எனல் பொருந்தாது. 'கலைக் களஞ்சியம்' குறிஞ்சியைச் செடி என

வும் மரமெனவும் கூறுகிறது. இவ்வாறு ஒன்றையே மர மெனவும் செடி எனவும் கூறியது ஏனோ? தெரியவில்லை. குரண்டகம் என்ற மற்றொரு பெயரும் குறிஞ்சிக்கு உண்டு என்பதைச் சூடாமணி நிகண்டால் அறியலாகும்.

வளரும் இடம்:—

கடல் மட்டத்திற்கு ஆறாயிரம் அடி உயரத்திற்கு மேலான மலைநிலங்களில் மட்டுமே குறிஞ்சிச் செடி வளரும். எனவே சிறு மலைகளில் இது வளராது; தமிழ்நாட்டிலும் மத்திய இந்தியாவிலும் காணப்படுகிறது; தமிழ்நாட்டிலே, நீலகிரி, கொடைக்கானல், பழனி முதலிய மலைகளில் பல ஆண்டுக்கு ஒருமுறையாகக் குறிஞ்சிச் செடி மலர்ந்து அழகிய காட்சியளிக்கும்.

மலர்தல்:—

மரஞ் செடிகளை மலரும் காலத்தைக் கொண்டு ஒருசில வகையாகப் பெரும்பாலும் பரிப்பர்: ஆண்டுக் கொருமுறை மட்டும் மலர்வன (Annuals) அவரை, பீர்க்கு, புடல் இவ் வகையைச் சேர்ந்தவை. பல ஆண்டுகட்கு ஒரு முறை மலர்வன (Multiannuals) மூங்கில், ரயிலகத்தாழை, கூந்தப்பனை முதலியன இவ்வகையின. குறிஞ்சிச் செடி பன்னிரண்டு ஆண்டுக் கொருமுறை பூக்கும் என மிகப் பழங்காலத்திலே, தமிழ் உரையாசிரியர்கள் எழுதிவைத்துள்ளனர். இது மிகைப்படச் சொல்லியதன்று. இக்காலச் செடி நூலறிஞர்களும் ஆறு முதல் பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை குறிஞ்சிச் செடி மலரும் என்கின்றார்கள். இவர்கள் பல்வேறு வகைக் குறிஞ்சிகளை எல்லாம் தொகுத்து இவ்வாறு கூறுகின்றார்கள். ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானஸ் (T. Anders அறிஞர் கண்டு பிடித்தது) என்பதைத் தமிழிலக்கியங்கள் கருங்காற் குறிஞ்சி எனக் குறிக்கும். இது பழனி மலையில் 1898, 1910, 1922 ஆகிய ஆண்டுகளில் மலர்ந்ததாகவும்,

நீலகிரியில் 1887, 1899, 1910, 1916 ஆகிய ஆண்டுகளில் பூத்து விளங்கியதாகவும் பைசன் (Fyson) எனும் செடிநூற் பேரறிஞர் குறித்துள்ளனர். கொடைக்கானலில் 1910, 1922, 1934, 1946, 1958 ஆகிய ஆண்டுகளில் பூத்திருந்த தாம். எனவே, குறிஞ்சி ஆறுமுதல் பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை பூக்கும் எனல் பொருந்துவதே.

குறிஞ்சிச் செடியின் வயதினை அதன் தண்டில் காணப் படும் வரைகளை எண்ணிக் கூறிவிடலாம். ஆண்டுதோறும் இளவேனிற் காலத்தில், குருத்துக்கள் தோன்றி வளரும். ஆண்டு இறுதியில் முதலில் தோன்றிய கீழ்க் குருத்து விழுந்து விடும். அவ்விடத்தில் ஒரு வரை இருக்கும். இதன் நடுத்தண்டு வரைகள் உடையதாகவும் சற்றுக்கருநிறமாக வும் நார்ப்பற்றுடையதாகவும் இருக்கும். அதனால் இது 'கருங்கால் குறிஞ்சி' எனச் செய்யுளில் போற்றப் படுகிறது. பூத்துச் சில காலத்திற்குள் இது இறந்துபடும்.

குறிஞ்சியடுக்கம்:— (Gregarious)

குறிஞ்சி பூக்குங் காலத்து அடர்ந்து கொத்துக் கொத் தாகப் பூத்துக் கவின்மிக்க காட்சி அளிக்கும். மலை முழு தும் ஒரே நீலநிறமாக எங்கும் எழில்தவழும் இன்பக் காட்சி யாக இலங்கும். நீலவானம் இறங்கி நீள்மலை மேல் தங்கி யது போன்று விளங்கும். குறிஞ்சி, கொழுஞ் செடியாகிப் புதராகிச் செறிந்து அடர்ந்து பூக்குங் காலத்து, அவற்றின் அருகிலுள்ள பிறசெடிகளை யெல்லாம் விஞ்சி, ஒடுக்கிவிடும். நீலகிரியில் குறிஞ்சி அதிகம் காணப்படுகிறது. அங்கு மிகப் பழங்காலத்தில்குறிஞ்சிபூத்துக் கண்கொள்ளாக் காட்சியாக, நீள்மலையே நீலநிறமான கோலப் போர்வை போர்த்தது போன்று விளங்கியதால், நீலகிரி எனப் பெயர் பெற்றது என்பர். இவ்வாறு நீலப் பூ பெரும்வாரியாக மலைகளில் பூத்தமையை, இலக்கியங்கள் மிக அழகாகப் போற்றுகின் றன.

"நடுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி"
என (359) மலைபடுகடாமும்

"நீள்மலை கலித்த பெருங்கோற் குறிஞ்சி"
என நற்றிணையும்

"கருங்கோற் குறிஞ்சி அடுக்கம்"
எனப் (374) புறநானூறும்

போற்றுவதினின்றும் குறிஞ்சிச் செடிகள் மிக நெருங்கிப் புதராக வளர்ந்தோங்குவன என்பதை யறியலாம். எனவே 'Gregarious' என்ற செடிநூலாரின் சொல்லுக்கு 'அடுக்கம்'' என்பது ஏற்ற தமிழ்ச் சொல்லாகும்.

மலர் நிறம்:—

கருங்காற் குறிஞ்சியின் மலர் நீலநிறமானது. 'கார்மலர் குறிஞ்சி' என்று மதுரைக் காஞ்சி வருணிக்கும். இதற்கு நீல மலர் எனவும் கார் காலத்தின் மலர் எனவும் பொருள் கூற லாம்.

"கருங்கால் குறிஞ்சி மதனில் வான்பூ"
என நற்றிணை (268)

வருணிக்கின்றது. மதனில் வான்பூ என்பதற்கு வலிமை யில்லாத (மெல்லிய) நீலநிறப்பூ எனப்பொருள் கொள்ளலே சிறப்பாகும். தலைவியின் பசலைபாய்ந்த நிறத்திற்குக் குறிஞ்சி மலர்நிறம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

"குறிஞ்சி நாள்மலர் புரையும் மேனி"
—நற்றிணை (301)

எனவே, கருங்கால் குறிஞ்சியே ஸ்ட்ரோபிலாந்தசு குந்தியா னசு என்பது தெரிந்தோம். அதன் மலர் நீல நிறம் என்ப தும் தெரிந்தோம்.

குறிஞ்சித் தேன்:—

குறிஞ்சி மலரில் வண்டுகள் உறிஞ்சிக் குடிக்க நிறையத் தேன் உண்டு. எங்கும் சேர்ந்து, கொங்குதோர்ந்து வாழும்

வன்சிறை வண்டு, குறிஞ்சி மலர் அடுக்கம் கண்டு. மாமகிழ் கொண்டு. மட்டிலாது தேனையுண்டு. மலைக் கூட்டிற்கெடுத்துச் சென்று மணம் மண்டும் பெரும் தேனடைகளை அமைப்பதுண்டு. மலர்க் காலத்தில் பெரிய பெரிய தேனடைகள் மலைச் சாரல்களிலும், மரங்களிலும் பல்வேறு இடங்களில் கணக்கில்லாமல் காணலாம். மணமிக்க குறிஞ்சித் தேனை மாந்திக்களித்த மாபெரும் புலவர்கள் காதலினிமைக்குக் குறிஞ்சித் தேன் இறாலை உவமை கூறினர்.

"கருங்கால் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

எனக் குறுந்தொகை தேனிறால்பெருமையைப் புகழ்கின்றது. தேனீக்கள் இறால் கண்களில் தேனிறைந்தவுடன் அவற்றை ஒருவிதமெழுகால் மூடிவிடும். சற்றுப்பழமையானவுடன் மெழுகும் தேனும் ஒரு வித நீல நிறமடைகின்றன. பின்னர் இதனடைகளினின்றும் தேன் சொட்டும்; இச் செய்தியைக் கிழ்க்கண்ட செய்யுள்வரிகள் விளக்குகின்றன.

நீல்நிற ஓரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லும் நெய்க்கண் இறுஅல்
(மலைபடுகடாம்-524-5)

அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
தேன் சோரியும். (புறநா. 109)

ஓரிபாய்தல் என்பது நீலநிறம் எய்துதலாகும்.

அறுகால் பறவைகள் (வண்டுகள்) உறுகாலை (காற்றை) எதிர்த்துச் சென்று, குடிமை காக்கும் குறிக்கொண்டு கூட்டிலே கூட்டியது கூட்டுத்தேன். குறிஞ்சிமலர்த்தேன் சுவை மிகுந்தது; மணம் சிறந்தது. நீலக்கடல்போல் நீள்வரையில் நெடுகிப் பூத்துக் குலுங்குவதால், தேனீக்கள் குறிஞ்சி மலர்களிலிருந்தே ஒரேவகைத் தேனை எளிதில் எடுத்துச் சென்று தேனடையில் இழைக்கும். ஒரே வகை மலர்களி

விருந்து எடுக்கும் தேனைத் தனிமலர்த் தேன் (Unifloral honey) எனச் சொல்லுவர். இது கிடைத்தற்கரியது; நோய் தீர்த்தற் குரியது. எனவே இதனை மலைநாட்டினர் பெரிதும் விரும்பியுண்பர்.

"கருங்கால் குறிஞ்சி மதனில் வான்பூ
ஓவுக் கண்டன்ன இவ்வரை இழைத்த
நாறுகோள் பிரசம் ஊறுநா டற்கு"

எனும் நற்றிணைப் (268) பாடல், தேனைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது.

குறிஞ்சிச் செடியின் இலை:—

இஃது அடியும் நுனியும் குறுகி இருக்கும். இலையின் விளிம்பு ரம்பப் பற்கள் போன்று சிறிதாக இருக்கும்.

குறிஞ்சியும் மலைநாட்டாரும்:—

குறிஞ்சி பூத்துக் குலுங்கும் காலத்திலே, மலைநாட்டு மாந்தர் மட்டிலாது கொட்டும் மாமலர்த் தேனை உண்டு, களிகொண்டு விழாக்கள் எடுத்தார்கள். முருகனுக்கு நறும்புகை காட்டி, குறிஞ்சிவிழாக் கொண்டாடினர்கள். குறிஞ்சி பூத்த காலத்தில், குறிஞ்சி மலர்களைக் குறத்தியர்கள் சூடி, குறிஞ்சிக் கூத்து ஆடி, குறிஞ்சிப் பண்பாடி, குறிஞ்சித் திணையில் கூடி மகிழ்வார்கள். இவ்வழக்கினைக் கீழ்க்காணும் செய்யுட்கள் தெரிவிக்கும்.

"கார்மலர் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேள் பேணி" — மதுரைக்கா 613

"குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்"
— சிலம்பு. குன்றக்கு 18

"இன்குரல் விறலியர்
நடுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடி" — மலைபடு 359

"நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி" — திருமுரு 239

இத்தகைய தொன்று நிகழ்ந்த விழாக்கள் இன்றும் மலைநாட்டாரிடையே சற்று மாறுதலுடன் நிகழ்கின்றன என்பதை அறியும்போது, மிக்க வியப்பாகின்றது. சூடுநாகபுரியிலுள்ள பைகர்களும் நீலகிரி மலையிலுள்ள தோடர்களும் குறிஞ்சித் தேன் விழாக் கொண்டாடுவராம். ஆடவரும் பெண்டிரும் குறிஞ்சித் தேன் குடித்து, குறிஞ்சிப் பூச்சூடி, குறிஞ்சிக் கூத்தாடுவராம். கொடைக்கானல் மலைப்புறத்தே உறையும் மலைநாட்டினர், "காட்டைக் காவலர்" என்னும் வனதெய்வத்திற்கு விழா எடுப்பார்களாம். இவ்விழாக் கொண்டாடா விடில், காட்டைக்காவலர் காட்டை அழித்து, மாட்டை அழித்து மக்கட்குக் கேட்டை விளைவிப்பார் என அஞ்சுகின்றனராம்.

மற்றொரு வகையிலும் குறிஞ்சிச் செடி மலைநாட்டினர்க்குப் பயன்படுகிறது. நீலகிரியில் தோடர்கள் குறிஞ்சிச் செடிகொண்டு மக்களின் வயதைச் சொல்கின்றனராம். குறிஞ்சியின் தண்டிலே ஆண்டுதோறும் வரை விழுந்து வரும். பன்னிரண்டாண்டுக் கொருமுறை மலரும். எனவே "அவளுக்கு ஒரு குறிஞ்சி யாயிற்று" என்று சொல்லல் அவளுக்குப் பன்னிரு அகவையாயிற்று என்பதைத் தெரிவிப்பதாம்.

மழை.

மு. வைத்தியலிங்கம் ஓலகடம்.

1 உலகி லுண்ட நீரதனை
உரிய கடமை மறவாமல்
இலகொளி நல்லோன் முகிலென்பான்
இனிய மழையாய் தந்திடுவான்

2 விண்வீழ் தண்புனல் மழையின்றேல்
விளம்பிடு வுலகிற் சிறுபுல்லும்
தன் தலை காட்ட லரிதாகும்
தரணியின் வாழ்வு மிலையாகும்!

3 தண்ணருள் சுரக்கும் நெஞ்சத்தான்
தன்பெருஞ் செல்வம் யாவினையும்
மண்ணில் வாழும் ஏழையர்க்கே
மகிழ்வுட னள்ளி வழங்குதற்போல்

4 வானம் வழங்கிடு நீரதுவும்
வையக மெங்கும் சென்றோடிக்
கானல் தன்னை மாற்றியதே
காழுலுந் தண்மை கூட்டியதே!

5 கற்றுத் தேர்ந்த சான்றோரின்
கருத்தா லமையும் நெஞ்சம்போல்
முற்றும் நிறைந்தே குளங்களெலாம்
முழுமை யெழிலோ டிலங்கியதோ!

6 பொங்கு மிளமை துள்ளுவதால்
பொலிவுறு மன்றற் காரிகைபோல்
தங்கு மழகாற் புவிமடைந்தை
தழையத் தழைய நின்றனளே!

7 சிந்தும் மழலைக் குமிண்சிரிப்பால்
சிறக்கும் தாயின் முகப்பொலிவைச்
சொந்த வுடலில் யாங்கணுமே
சொல்லும் புவியாற் காட்டினளே!

8 தரையும் மரமும் கூரைகளும்
தகைமை குன்றாத் தூய்மையினை
உரைக்கும் அறத்தா லுணர்ந்தாரின்
உள்ளம் போலக் கொண்டனவே

9 மழையே வுலகின் மாமுதல்வன்
மழையே வுலகின் பேரன்னை
மழையே வுலகி லின்னமுதம்
மழையா லுலகம் மாண்புறுமே!

மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

புலவர், இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம்.

முடிகெழு வேந்தர் மூவருக்கு முரிய முத்தமிழ்க் காவியத்தை முறை வழுவாமல் இயற்றிய பெருமை இளங்கோவடிகட்கு உண்டு என்பது நாடறிந்த உண்மை. மூவேந்தரையும் ஒப்பமதித்துப் பாடிய உயர்வே அன்றிச் சமயக் கோட்பாட்டிலும் நடுவுநிலை நின்று அவ்வவர்க்கு அவ்வவர் சமயத்தராய்த் தோன்றித் தமக்கென எல்லோரும் ஒப்பும் பொதுச் சமயத்தினைக் கொண்ட பெருமையும் அடிகட்கு உண்டு. இது நூலில் பரந்து பட்டுக் காணக்கிடப்பினும் எடுத்த எடுப்பிலேயே - மங்கல வாழ்த்துப் பாடலிலேயே — நிலை நாட்டி விடுகின்றார் அடிகள்.

மங்கல வாழ்த்துப் பாடத் தொடங்கிய அடிகள் இருவகை மங்கல வாழ்த்துக்களை நம் முன்னர் வைக்கின்றார். முன்னது தங்கூற்றாகக் கூறும் மங்கல வாழ்த்து; அஃது இயற்கைப் பொருள்களைக் கொண்டு, இறை உண்மையை நிலை நிறுத்தும் தொன்மைத் தமிழ்ச் சமயத்தின் உயர் கோட்பாட்டை விளக்குவது. பின்னது 'கொடியன்னார்' கூற்றாகக் கூறும் மங்கல வாழ்த்து. அது, கோவல கண்ணகியரை மங்கல அமளியிலே ஏற்றிவைத்து மலர் தூவி வாழ்த்தும் திருமண வாழ்த்தாய் அந்நாளைத் தமிழக நிலைமையை நிறுவுவது. இவ்விரண்டு வாழ்த்துக்களையும் உடைமையால் முதற்பகுதி மங்கல வாழ்த்துப் பாடல் என்னும் பெயர் பெற்றதாகும்.

மங்கல வாழ்த்துப் பாடும் அடிகள் திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் ஆய நான்கினையும் முறையே வாழ்த்துகின்றார். இம் முறைவைப்பிற்குத் தக்க காரணம் ஏதேனும் இருத்தல் இன்றியமையாததாம். ஞாயிற்று வணக்கமே

மக்கள் வழிபாட்டில் முதன்மை பெற்று நிற்கின்றது. ஞாயிற்றுக்கிழமையே முதற்கிழமை என உலகம் ஏற்றுக் கொண்டுளது. அறிவியல் உலகமும், ஞாயிற்றினின்று பிரிந்து வந்த கூறுகளே திங்கள் முதலாய அண்டங்கள் என்று ஆய்ந்துரைக்கின்றது. பண்டைப் புலவர்கள் பலரும் ஞாயிற்றுக்கு முதன்மை தந்ததுடன், ஞாயிற்று வணக்கம் உண்மையையும் கூறியுள்ளனர். எனினும் ஞாயிற்றை முன்னுகக் கூருது அடிகள் திங்களை முதற்கண் வைத்துப் போற்றியதன் உட்கிடை என்ன என்பதை நுணுகிப் பார்த்தல் வேண்டும்.

அடிகள் உள்ளத்தே கண்ணகியார் நீங்கா இடம் பெற்று விட்டார். மனித நிலையோடு பிறந்து தெய்வநிலை எய்தும் அளவுக்கு இடம் பெற்றுவிட்டார். அத்துணைப் பெருமையினைக் கோவலனே,பிறரோ எய்திவிடமுடியவில்லை. அக்காரணத்தாலேதான் கண்ணகியார் காற்சிலம்பினையே, நூற்பெயராகக் கொண்டு காவியம் இயற்றினுர். பதிகம் இயற்றியவரும் ''சூழ்வினைச்சிலம்பு காரணமாக, நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுள்'' என்று கூறி நூல் யாக்கப் புகுந்தார் அடிகள் என்றே கூறினுர். இவ்வாறு சிலம்பினை முதலாகக்கொண்டு அடிகளார் எழுதிய ஒன்றே கண்ணகியார் சிறப்புக்குத் தக்க சான்ருக இருத்தல் உண்மையாகவும் வெளிப்படையாகவே கண்ணகியாருக்கு மங்கல வாழ்த்துக் காதையிலே முதன்மை தந்து விடுகின்ருர் அடிகள்,

கோவல கண்ணகியாரை அடிகள் அறிமுகப்படுத்தி வைக்கும் போது கண்ணகியாரைத்தான் நம்முன் கொண்டு வந்து நிறுத்துகின்ருர்.

''மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னுள் ஈராறுண் டகவையாள்;
...............பெயர் மன்னுங் கண்ணகி என்பாள்''

என்று பாடுகின்ருர். இதன் பின்னரே கோவலனைக்கொண்டு வந்து நிறுத்தி,

"வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து வானென்பான்
இருநிதிக் கிழவன் மகன் ஈரேட்டாண்டு அகவையான்
... .கோவலன் என்பான்"

என்று பாடுகிறார்.

பெண்ணை முற்படக் கூறவேண்டும் என்றோ ஆணை முற்படக் கூறவேண்டும் என்றோ வரன்முறை ஒன்றும் இல்லை. இருபாலரும் ஒப்ப மதித்து வாழ்ந்த பழந்தமிழ்ப் பண்பாடு இவ்வேற்றுமைக்கு இடம் அளிக்காது. எனினும் அடிகள் கண்ணகியாரை முற்படக் கூறியது அவர் உள்ளத்தே கண்ணகியார் தெய்வக்கோலம் காட்டியமையாலேதான். "கோவலன் கள்வனல்லன்; என் காற்சிலம்பினைக் கவரும் பொருட்டால் கொன்ற காவலனே கள்வன்" என்று நிலை நாட்டிய தீதுதீர் சிறப்பால் கண்ணகியாரை உள்ளூற எண்ணினார். இதனை எண்ணித் திளைத்தவருள் முதல்வராக அறியப்படுகின்றார் சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர். அவர் "இவளை முற்கூறிற்று; கதைக்கு நாயகியாகலின்" என்றார். இச்சொற்றொடரின் ஆழம் எண்ணி எண்ணி இன்புறற்பாலதாம். கண்ணகியாரை முற்படக் கூறிய காரணம் தெளிவாயிற்று. இனித் திங்களை முற்கூறியது ஏன் எனக் காண்போம்.

கோவல கண்ணகியர் "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை" அமர்ந்திருந்தனர். இதனை உவமை முகத்தான் அடிகள் "கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல" இருந்தனர் என்றார். ஞாயிறும் திங்களும் ஒன்றுபட்டு இருந்தது போன்று கோவல கண்ணகியர் இருந்தனர் என்றாராம். இதுகொண்டு ஆடவர் பெண்டிரைக் கதிருடன் ஒப்பிட்டுக் கூறும் வழக்குண்மையினை அறியலாம்.

"அஞ்சுடர்நீள் வாள்முகத் தாயிழையும் மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்-டஞ்சி
ஒருசுடரு மின்றி உலகுபா ழாக
இருசுடரும் போந்ததேன் றூர்"

என்னும் இத்திணைமாலைப் பாட்டு,

தலைவனும் தலைவியும் காட்டுவழிச்செல்வதைக்கண்டவர்கள் அவர்களைத்தேடிக்கொண்டு வரும் செவிலித்தாய்க்கு உரைப்பதாக அமைந்ததாம், ''உலகு பாழாகுமாறு இருசுடரும் போந்தது போல்வது தலைவன் தலைவியர் ஆகிய இருவர் உடன்போக்கும்'' என்றார்கள். இதில் தலைவன் தலைவியர் சுடர்கட்கு ஒப்பிடப் பட்டுள்ளதை அறியலாம்.

உதயணன் வாசவதத்தையுடன் கூடி நின்ற நிலைமையை வருணிக்கும் கொங்குவேளிர்,

''மதியமும் ஞாயிறும் கதிரிற் தோடிக்
கடனிற வானில் உடனின் றாங்கு'' என்றும்,

தலைவனும் தலைவியும் தலைப்பட்ட நிலைமையை இறையனார் களவியல் உரைகாரர் ''வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம்கதி வழுவித் தலைப்பெய்தாற் போன்று'' என்றும் கூறினர். இவற்றால் தலைவன் தலைவியரைச் சுடரொடும் ஒப்பிட்டுக் கூறுவது பரவலான் ஒரு வழக்கம் என அறியலாம். அவ்வழக்கைக் கொண்டே அடிகள் கண்ணகி கோவலர் திருமணம் கூறும் மங்கல வாழ்த்திலே இரு கதிர்களையும் குறிப்பிட்டு வாழ்த்தினர். இரு சுடர்கட்கும் இணையாயவர்கள் தலைவி தலைவர் ஆதலால் என்க.

இங்குக் காட்டிய சான்றுகள் அனைத்தும், தலைவன் தலைவியரை இரு சுடர்க்கும் இணையாகக் காட்டுவதைத் தெளிவாக்குகின்றனவே அன்றித் தலைவன் இச்சுடர், தலைவி இச்சுடர் என்று காட்டுமாறு இல்லை. ஆயின் தலைவன் எச்சுடர்க்கு நிகராவான்? தலைவி எச்சுடர்க்கு நிகராவாள்?

உலகைக் காத்து வருவன இரண்டாம். அவை தண்மையும், வெம்மையும் ஆம். தண்மைக் கூறே இல்லாப் பொருளோ, வெம்மைக் கூறே இல்லாப் பொருளோ உய்யா; பயன்படா; அதுபோல் உயிர் தாங்கும் மனித வாழ்வும் வெம்மையும் தண்மையும் இன்றிப் பயன்படாது. மாந்தர் உடல்

வெப்ப தட்ப நிலைச்சமன்பாட்டில் மிகினும், குறையினும் ஊறுபட்டு அல்லல் உறுத்துவதை எவரும் அறிவர். ஆக லானே தான் உடலைத் தக்கவாறு பேணி வெப்ப தட்பக் கூறுகளை ஒரு நிலையில் வைத்தல் அவசிய மாகின்றது. வெப்ப தட்பச் சமநிலை அமையா உடல் உடலன்று! இச் சமநிலை அமையாத் தனிவாழ்வும், கூட்டு வாழ்வும் வாழ்வு ஆகா.

பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணுகக் கொண்டவன் தீதற விளங்கும் திகிரியோன் என்னும் பெருந்தேவனார் வாக்கும், "சுட்டும் சுடர்விழிதான்–கண்ணம்மா! சூரிய சந்திரரோ?" என்னும் பாரதியார் வாக்கும் திங்களும் ஞாயிறும் தெய்வத் திருக்கண்களாகக் குறிப்பிடுவதைக் கண்டறிக. "தண்மையொடு வெம்மைதான் ஆயினான்" என்னும் திருநாவுக்கரசர் திருவீழிமிழலைத் தேவாரத் திருமொழி இதனை விளக்கி நிற்கின்றது அன்றோ! வெம்மையும் தண்மையும் கலந்து நிற்கும் இறைவனை "அம்மையே அப்பா" என்றும், "அம்மையுமாய் அப்பனுமாய்" என்றும் கரைந்துருகிக் கண்ணீர் சிந்தி 'அன்பர்கள்' அழைப்பதை அறியார் யார்?

வெம்மையாய் – தண்மையாய் – இரண்டுமாய் நிற்கும் இறைவனை எய்த, மாந்தருக்கும் இத்தன்மைகள் வேண்டற் பாலவாம்.

மக்களுள் வெம்மைத் தன்மையொடு விளங்குபவர் யாவர்? தண்மைத் தன்மை யொடு இலங்குபவர் யாவர்? முறையே ஆடவர் பெண்டிர் அல்லரோ? ஊக்க மிக்க ஆண்மைக்கு வெம்மையும், உள்ளன்பு மிக்க பெண்மைக்குத் தண்மையும் இயல்பாய் அமைகின்றன அல்லவா! இதற்கு ஏற்ப, வெம்மையாம் ஆண்மை, தண்மையாம் பெண்மையை விரும்பி நிற்பதன்றே திருமணம்! வெம்மையும் தண்மையும் ஒருங்குகூடி, ஒப்பநின்று ஒல்லும் வகையால் கடனாற்றி இல்லறம் இனிது காத்து இறுதியில் பெண்மைப் பிழம்பாக

அமைவது அன்றே கடப்பாடு! இதற்கு வழியென்ன? திருமணத்தின் பெயரால் ஆடவர் பெண்டிரை ஒன்றித்து வைத்தல் வேண்டும். இதுவே மங்கலம். இதற்குரிய வாழ்த்தே மங்கல வாழ்த்து!

மங்கல வாழ்த்தில் இயற்கை வடிவாய் இறைவனை முன் னிறுத்திச் சமயப் பொதுமையைக் காட்டும் அடிகள், தலை வன் தலைவியர் தன்மைக்கு இணையாய கதிர்களை எடுத்துக் கொண்டார். இஃது இயற்கை வாழ்த்தாக—மணவாழ்த்தாக அமைந்து வருகின்றது. "மணம்" இயற்கை தானே!

இதுநிற்க. இருசுடர்க்கு இணையாகக் கோவல கண்ணகியரை மனையறம் படுத்த காதையில் பொதுவாகக் கூறும் அடிகள் வஞ்சினமாலையிலும், ஊர்சூழ் வரியிலும் சிறப்பாகக் குறிப்பிட்டு உரைப்பவை நோக்குதற்குரியவை யாம்.

கோவலன் கொலை நிகழ்ச்சியைக் கேட்டறிந்த கண்ணகி யார் பொங்கி எழுந்தார்; அவ்வீழ்ச்சி, நிலவினைப் பொழியும் திங்கள் கரியமுகிலோடும் பெரிய நிலத்தின்கண் வீழ்ந்தது போலாயிற்று. (18 : 30-1) இதன்பின், மதுரை மக்கள் சிலர் கொலையுண்ட கோவலனைக் கண்ணகியாருக்குக் காட்டு கின்றனர். கண்ணகியார் காணுகின்றார். ஆனால் கவலையே உருவாய கண்ணகியாரைக் கதிரோன் காணமாட்டானாய்த் தன்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு உலகுக்கு இருள்ஊட்டி மலையிடை மறைகின்றான். (19-30-2)

கண்ணகியார் மண்ணிடை வீழ்ந்து புரள்வது திங்கள் வீழ்ந்து புரள்வது போன்றது என்று வஞ்சின மாலையிலே காட்டும் அடிகள், ஊர்சூழ் வரியிலே கோவலன் மறைவைக் கதிர்மறைவுடன் இணைத்துக் குறிப்பிடுகின்றார். இவை, அவர் கண்ணகியரைத் திங்களுக்கும், கோவலனை ஞாயிற்றுக்கும்

இணையாகக் கொண்டமையை நிறுவத்தக்கஅகச்சான்றுகள் ஆதற்குத் தக்கவையாம்.

கண்ணகியரை முற்பட அறிமுகப் படுத்துகின்ருர் அன்ருே அடிகள்! அதற்கேற்பத் தண்சுடராம் திங்களை முற்பட வாழ்த்தினர். கோவலனைப் பிற்பட அறிமுகப்படுத்தி வைப்பது போன்று வெங்கதிராம் ஞாயிற்றைப் பிற்படக் கூறினர். இவை மேற்போக்கில் திங்கள் ஞாயிறெனத் தோற்றினும் ஊன்றி உணர்வார்க்குப் புலமை நலங் கனிந்த வாழ்த்துக்களாக அமைந்துள்ளன.

(தொடரும்)

இன்பச் சோலை.

புலவர், இரா. இளங்குமரன், மு. மு. உயர் நிலைப்பள்ளி
திருப்பரங்குன்றம்.

உள்ளம் திருத்தும் வள்ளுவமே!
உவப்பால் உன்பா வள்ளுவமே;
உண்மை தெரித்த பொற்சிலம்பே!
உயிர்போக் கினதுன் பொற்சிலம்பே;
அள்ளக் குறையா மேகலையே!
அறிய விரும்பின் மேகலையே;
அன்பு மொழிசிந் தாமணியே!
அமைந்த மொழிநந் தாமணியே;
தெள்ளிக் கொழிக்கும் எண்தொகையே!
தேடக்கிடையா எண் தொகையே;
தேன்போல் இனிக்கும் பதின்பாவே!
தெவிட்டாச் சுவையென் பதின்பாவே;
வெள்ளத் தணையாம் காப்பியமே;
வேண்டும் தமிழ்க்குன் காப்பியமே;
வெளிச்சம் அளிக்கும் புத்தகமே!
வீட்டில் நிறையின் புத்தகமே;

இளம்பூரணர் எழுத்துரை

[ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

6. ஒற்றுமை நயம் வேற்றுமை நயம்

ஒற்றுமை நயம், வேற்றுமை நயம் என்பன எழுத்ததிகாரத்தில் ஆறிடங்களில் ஆளப்படுகின்றன உரையாசிரியரால். 'கி' என்ற எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். இதை உயிரும் மெய்யும் சேர்ந்த ஒரு தனியெழுத்தாகக் கூறினுல் ஒற்றுமை நயத்திற் கூறுதலாம். இதை (க்+இ என) மெய்யும் உயிரும் சேர்ந்த இரண்டெழுத்தாகக் கூறினுல் வேற்றுமை நயத்திற்கூறுதலாம். இதற்கேற்ப, 'உயிர்மெய்' என்ற (இருசொல் தொடர்ந்த) சொல்லுக்கு உயிரும் மெய்யும் சேர்ந்த ஓர் எழுத்து என ஒற்றுமை நயத்திலும் உயிரும் மெய்யும் ஆகிய ஈரெழுத்தென வேற்றுமை நயத்திலும் பொருள் காணலாம்.

> "உயிர்மெய் என்பதனை ஒற்றுமை கோள்வுழி உம்மைத் தோகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தோகை எனவும் வேற்றுமை கோள்வுழி உம்மைத்தோகையெனவும் கோள்க"

என்று இளம்பூரணரும் குறிப்பெழுதினர்.

(1) ஆசிரியர் தொல்காப்பியர் உயிர்மெய் ஒலிக்குமாறு கூறவந்தவர்,

> "மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே" (18)

என்ருர். இதன் கருத்து, "மெய்ஒலி தோன்றியபின்னர் உயிர் ஒலி தோன்றும், உயிர் மெய் எழுத்து ஒலிக்கப்படும் போது" என்பதாம். இவ்விடத்தில் உயிர்மெய் என்பதை, உயிரும் மெய்யும் எனத் தனித்தனியெழுத்தாகக் கொண்டு, எவ்வெழுத்து முன் ஒலிக்கும் எவ்வெழுத்துப் பின் ஒலிக்கும்

என வேறுபடுத்திக் காட்டலின், உயிர்மெய்யானது ஒலிக்குமாறு வேறுபடுத்திக் காட்டப்பட்டதாம். அதனால் வேற்றுமைநயம் கருதப்பட்டது இந்நூற்பாவில். "ஈண்டு வேற்றுமை நயம் கருதப்பட்டது" என்றார் உரையாசிரியர்.

(2) 'தனி மெய்கள் மொழிக்கு முதலாகா; உயிரோடு கூடிய மெய்களே முதலாம்' என்னவந்த ஆசிரியர்,

"உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா" (60)

என்றார். இங்கும் 'உயிர்மெய்' என்ற சொல்லுக்கு 'உயிரோடு கூடிய மெய்' எனப் பிரித்துப் பொருள் கூற வேண்டுதலின் வேற்றுமைநயம் கருதப்பட்டதாம். "ஈண்டு உயிர் மெய் என்றது வேற்றுமைநயம் கருதியென வுணர்க" என்றார் உரையாசிரியர்.

(3) அடுத்து உயிர்மெய்யீற்றுச் சொல்லாயின் அஃது இன்ன வீற்றுச் சொல் எனப்படும் என்று கூற வந்த ஆசிரியர்,

"உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே" (107) என்றார். மெய்யும் உயிரும் கூடிய எழுத்தை ஈறுபற்றி உயிரீறு எனப் பிரித்துக் கூறுதலின் ஆசிரியர் வேற்றுமைநயம் கருதியே கூறினர். அதனால்தான் இளம் பூரணர்,

> "ஈண்டு உயிர்மெய் ஒற்றுமைநயத்தான் உயிர்மெய் என வேறோர் எழுத்தாவதன்றி ஈறும் இடையும் உயிர்என ஓர் எழுத்தாயும் முதல் மெய்யென ஓர்எழுத்தாயும் நின்றதாயிற்று."

என அதன் உரையின்கீழ் எழுதினர். மேற் கூறிய மூன்றிடங்களிலும் உயிர்மெய் என்றதை வேற்றுமைநயத்திலேயே ஆசிரியர் கூறியுள்ளனர்.

(4) தனிமெய்க்கு அளபு கூறவந்த விடத்து,

"மெய்யின் அளபே அரையென மொழிப" **(11)**

என்றார் ஆசிரியர். தனிமெய்க்கு மாத்திரை அரையென்பது கருத்து. இந்நூற்பாவுரைக்கீழ் உரையாசிரியர்,

"காக்கை கோங்கு எனக்கண்டு கொள்க. ஈண்டுவேற்றுமைநயமின்றி ஒற்றுமைநயம் கருதப்பட்டது."

என எழுதினர். தனிமெய் அரை மாத்திரை பெறும் என்பதற்குக் காட்டிய இவ்விரண்டுதாரணங்களிலும் க், ங் என்னும் எழுத்துக்களே அரை மாத்திரை பெறும். வேற்றுமை நயமின்றி ஒற்றுமைநயம் கருதப்பட்டது எது என்பது புரியவில்லை. க் ங் என்பவற்றை அவ்வாறு கருத இடமில்லை. காக்கை கோங்கு என்பவற்றுள்ள உயிர்மெய்கள் ஏறிய உயிரின் மாத்திரையே தமக்கு மாத்திரையாகக் கூறப்படுதலின் அவை வேற்றுமைநயமின்றி ஒற்றுமைநயமாகக் கருதப்பட்டன என்னலாம். ஆனால் இதுகாறும் கூறியவற்றில் ஆசிரியர் தொல்காப்பியரே கருதிக் கூறியதாகக் கூறப்பட்ட அந்நயங்கள், இந்நூற்பாவில் மட்டும் உரையாசிரியர் தாம் காட்டிய உதாரணங்களில் தாமே கருதிக் காட்டினர் என்பது பொருந்துமா? இஃது ஐயுறவுக்குரியதே. இது பற்றித்திரு. P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள்,

"காக்கை கோங்கு என்றவிடத்திலுள்ள ககர ஙகர ஒற்றுக்கள் இடத்தானும் முயற்சியானும் வேறுபடினும் அரை மாத்திரை ஒலிக்கும் என்ற தன்மையில் ஒற்றுமைப்பட்டன என்ற பொருளை அத்தொடர்க்குக் கூறல் வேண்டும்"

என்றெழுதியுள்ளார்கள், இதுவும் பொருந்துவதாக இல்லை. அரைமாத்திரை யென்ற ஒற்றுமைநயம் என்று கூற வேண்டுவதில்லை. அன்றியும் உரையாசிரியர் தாம் காட்டிய உதாரணங்களிலேயே அந்நயம் பற்றிக் கூற வேண்டுவதும் இல்லை.

மற்றைய நூற்பாக்களிற்போலவே இந்நூற்பாவிலும் ஆசிரியர் தொல்காப்பியர் கருதிக் கூறிய கருத்தாகக் கொள்வதே சாலப்பொருத்தமாம். அப்படியாயின் அவர் "மெய்யின் அளபே அரையென மொழிப" என்றதில், 'மெய்' எனக்கூறியது வேற்றுமை நயமின்றி ஒற்றுமைநயம் கருதிஎன்னலாம். இந்நூற்பாவின் முன் நூற்பா,

"மெய்யோடியையினும் உயிரியல் திரியாது" (10)

என்பதாம், "உயிர்மெய்யானது மெய்யோடு உயிர் இயையப்பிறந்த நிலைமைய தாயினும் அம்மெய்களுக்கு மாத்திரையின்றி உயிர்களின் மாத்திரையே மாத்திரையாய் வரும்" என்பது இதன் கருத்து. எனவே ஏறிய உயிரின் அளபே உயிர் மெய்க்கும் அளபாம் என்பது பெறப்பட்டது. இதற்கடுத்து, "மெய்யின் அளபே அரையெனமொழிப" என்றவிடத்தில் 'மெய்' என்பது தனிமெய்யா உயிர்மெய் எழுத்திலுள்ள மெய்யா என்ற ஐயம் வரும். அதனால் ஆசிரியர்மெய் என இரண்டையும் சேர்த்தே கூறினர். அதாவது தனிமெய்யும் உயிர் மெய்யில் உள்ள மெய்யும் மெய்யெனப்படும் ஒற்றுமை கருதிப் பொதுவில், 'மெய்யின் அளபு அரை' யென்றார் என்பதாம். ஆதலின் ஆசிரியர் மெய்யென்றது ஒற்றுமை நயம் பற்றி யென்னவேண்டும். இதுவே உரையாசிரியர் கூறியதென்க.

அடுத்து ஒற்றுமைநயம்பற்றி மெய்எனக்கூறினர் ஆசிரியர் என்றாலும், அதனால் உயிர்மெய்யில் உள்ள மெய்க்கும் அரை மாத்திரை உண்டென்றுகொள்ளலாகாது. மெய்யோடியையினும் உயிர் இயல் திரியாது' என்றதால் அதை விலக்கியமை காணவேண்டும். "மெய்யின் அளபே" என்னும் நூற்பாவானது, "மெய்யோடியையினும்" என்னும் நூற்பாவுக்குமுன் வைக்கப்பட்டிருந்தால் மிகவும் பொருத்தமாகும்.

(5) யரழ வென்னும் மூன்று முன் ஒற்றக்
கசதப ஙஞநம வீரொற் றாகும். (48)

இந்நூற்பா ஈரொற்றுடனிலை மெய்ம்மயக்கமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

> "யரழ வென்று சொல்லப்படுகின்ற மூன்றனுள் ஒன்று முன்னே ஒற்றாய் நிற்ப அவற்றின் பின் கசதபக்களில் ஒன்றுதல் ஙஞணநமக்களில் ஒன்றுதல் ஒற்றாய் வர அவை ஈரோற்றுடனிலையாம்"

என்பது இளம்பூரணர் உரை. இந்நூற்பா மொழிமரபில் வைக்கப்பட்டது. முன்னுள்ள நூன்மரபில் மெய்ம்மயக்கம் புற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நூற்பாவும் மெய்ம்மயக்கமே கூறுதலின் இதனையும் நூன்மரபிலேயே கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறாமைபற்றி உரையாசிரியர்,

> "இதனை நூன்மரபினகத்து மேய்ம்மயக்கத்துக்கண் கூறுக வேனின் ஆண்டு வேற்றுமைநயம் கோண்டதாகலின் ஈரோற்றுடனிலையாதல் நோக்கி ஒற்றுமைநயம்பற்றி ஈண்டுக் கூறப்பட்டது."

என்று எழுதினர்.

இவர் எழுதிய தொடர்க்கு விளக்கம் எழுத வந்த திரு. P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் அவர்கள்,

> "ஈண்டு வேற்றுமைநயம் என்பது தோடரும் எழுத்துக்கள் வெவ்வேறிடத்தில் பிறத்தலைக் குறிக்கும். ஒற்றுமைநயம் என்பது அவை பெரும்பான்மையும் ஓரிடத்திற் பிறத்தலைக் குறிக்கும்"

எனத் தமது தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சிக் குறிப்பில் எழுதியுள்ளார்கள். 'வேய்க்குறை' என்பதில் உடனின்ற ஈரொற்றுக்களாகிய யகரமும் ககரமும் வெவ் வேறிடத்திலேயே பிறத்தலைக் காணலாம். அன்றியும் யரழ வென்பன இடையினவெழுத்துக்கள். அவற்றின் பின்வருவன வாகிய க ச த ப ங ஞ ந ம என்பன வல்லின

மெல்லின எழுத்துக்கள். எனவே பிறப்பிடம் சிறுபான்மை கூட ஒன்றுக இருத்தற்கில்லை. ஒன்றிரண்டு ஒற்றுமையாக இருத்தலைக் காட்டுதல் பொருந்தாது. ஆதலின் அவர்கள் கூறியது ஏற்புடைத்தாகாது. பின்வருமாறு கூறுவதே ஏற்புடைத்தாம்.

நூன்மரபில்கூறப்பட்ட மெய்ம்மயக்கம்தன்மெய்யோடு தான் மயங்கும் உடனிலை மயக்கமும் பிறமெய்யோடு மயங்கும் வேற்றுநிலைமயக்கமும் என இரண்டாம். 'வெல்லம்' என்பதில் லகர மெய் தன் மெய்யான லகரத்துடன் மயங்கி உடனிலைமெய்ம்மயக்கமாயிற்று. 'வெல்க' என்பதில் லகரமெய் பிறிதான ககர மெய்யுடன் மயங்கி வேற்றுநிலை மெய்ம்மயக்க மாயிற்று. இவ்விரண்டிலும் லகரமெய் அடுத்த உயிர்மெய்யில் உள்ள மெய்யுடன் மயங்கியதாகும். அஃதாவது லகரமெய், அடுத்த உயிர்மெய்யை வேறுபடுத்திப் பிரிக்கப்பட்ட மெய்யுடன் மயங்கியதாகும். அதனல் நூன்மரபிற் கூறப்பட்ட மெய்ம்மயக்கம் அடுத்த மெய்யை வேற்றுமை நயத்திற் கொண்டு கூறப்பட்டதாகும். மொழி மரபிற் கூறப்பட்ட ஈரொற்றுடனிலை மெய்ம்மயக்கம் அவ்வாறன்று. வேய்க்குறை என்பதில் யகரமெய் அடுத்த ககர மெய்யுடன் மயங்கியதாகும். அதாவது யகரமெய் அடுத்தும் ஒரு தனி மெய்யாகிய ககர மெய்யுடன் மயங்கியதாகும். எனவே யகரமெய் தன்போல ஒரு மெய்யுடனேயே மெய் யென்ற ஒற்றுமையில் மயங்கியதாகும். அதனல் மொழி மரபில் ஒற்றுமை நயம் கருதிக் கூறப்பட்டது. ஆர்பு, ஆர்ப்பு என்பனவும் முறையே வேற்றுமை நயமும் ஒற்றுமை நயமும் கருதியனவாம். இவ்வாறே பிறவும் கொள்க. இவ் வாறு கொள்வதே ஏற்கும்.

(6) "ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறு மெய்யொழியக் கெடுதல் வேண்டும்" (469)

இதில், ஆறுஎன்ற எண்ணின் இறுதி'று' என்ற எழுத்தை

ஈறு (உ) எனவும் மெய் (ற்) எனவும் பின்னர்ப்பிரித்துரைக்கும் ஆசிரியர் முன்னர்க்குற்றியலுகரம் எனக்கூறியது 'று' எழுத்தை உயிர்மெய்யாகக் கருதிய ஒற்றுமைநயத்தான் என்க.

இது காறும் கூறிய வாற்ருல் ஆசிரியர் தொல்காப்பியர் ஒற்றுமைநயங்கருதி நூற்பாவிலேயே சொல் அமைத்து இருநூற்பாவும் (11,469) வேற்றுமைநயம் கருதி (உயிர் மெய் என்று) சொல் அமைத்து மூன்று (18,60,107) நூற்பாக்களும் சொல்லால் இன்றிக் கருத்து வகையில் மெய்ம்மயக்க நூற்பாக்களில் வேற்றுமை நயம் கருதி நூன் மரபில் சில (22—30) நூற்பாக்களும், ஒற்றுமை நயம்கருதி மொழி மரபில் ஒரு (48) நூற்பாவும் அமைத்துள்ளார் என்பது போதரும். பிற விடங்களும் பலவுள. கருத்தறிந்து கொள்ளவேண்டும்.

---

1. மாணவர்பகுதி

சங்கம் வளர்த்த தமிழ்*

1 முன்னம் உலகாண்டு மூத்தமொழி மூவாச்சீர்க்
கன்னிமொழி காலங் கடந்தமொழி--மன்னுலகில்
எங்கள் மொழியாகி இவ்வுலகை யாளுமொழி
சங்கம் வளர்த்த தமிழ்.

து. பொன்னுசாமி
முடிவுநிலை இரண்டாம்யாண்டு

2 பண்கூட்டும் பாட்டிசையும் பண்புமிகும் பாற்சுவையும்
வண்ணமிகு சொற்களின் வாய்மையும்—மண்ணுலகில்
தங்கியே நிற்கத் தமிழகத்தார் போற்றியதே
சங்கம் வளர்த்த தமிழ்

சா. ஆதினமிளகி
முடிவுநிலை இரண்டாம்யாண்டு

* இவ்வடியை ஈற்றிலேவைத்து எழுதப்பட்டுள்ள வெண்பாக்கள்.

3 பொங்கும் புலன்கொண்டு போற்றிப் புரந்ததுவும்
எங்கும் புகழால் இசைந்ததுவும்—தங்கமெனத்
துங்கமுடன் மூவேந்தர் தூய்மையாய்க் காத்ததுவும்
சங்கம் வளர்த்த தமிழ்.

பெ. இராமசாமி

முடிவுநிலை முதலாண்டு.

4 வாசமலர் ஆடிவரும் வண்டென்னும் சான்றோர்தாம்
நேசமுடன் ஆய்ந்து நினைந்தினிது—மாசறவே
சங்கமெனும் பூங்காவிற் சார்ந்தோங்கும் பொன்மலராம்
சங்கம் வளர்த்த தமிழ்.

ரா. விசயலட்சுமி

முடிவுநிலை முதலாண்டு,

5 அரவை யணிந்தவனும் ஆறுமுக வேலவனும்
மரவு தழைக்கவந்த மாலும்—தரவுயர்ந்து
பொங்கும் புகழுடனே போற்றும் புவியமுதே
சங்கம் வளர்த்த தமிழ்.

அ. அற்புதமணி

முடிவுநிலை முதலாண்டு,

6 மான்விழியாள் வள்ளி மகிழ்நன் மலைக்குமரன்
மானிலத்தார்க் கீந்த வமுதமே!—நானிலத்தே
எங்கும் இசைபரப்பும் எம்மாவி யன்னதே
சங்கம் வளர்த்த தமிழ்.

சி. பழனியப்பன்

முதனிலை 2ஆம் யாண்டு.

7 பண்புள்ள பாடலையும் பாண்டிய மன்னரையும்
கண்போற் புலவரையும் காத்ததெது?—மண்ணுலகில்
எங்கும் அறியாமை இருளகலச் செய்வதெது?
சங்கம் வளர்த்த தமிழ்.

வி. நரசிம்மன்

முதனிலை 2ஆம் யாண்டு,

8 தென்றலென நன்மலையாம் தென்மலையில் நின்றுடி
மன்றலுடன் கூடலதில் வந்திருந்து— மன்னுபுகழ்ப்
பொங்கித் ததும்பும் புலவருளம் தந்ததே
சங்கம் வளர்த்த தமிழ்.

பி. கே. இராசராம்

முதனிலை 2ஆம் யாண்டு

9 நாவலரும் பாவலரும் நாட்டிலுள யாவருமே
ஆவலுடன் போற்றி அருளுடனே—காவலராய்
இங்கிதமாய் வாழ எழுந்த உயர்மொழியே
சங்கம் வளர்த்த தமிழ்.

அ. கி. அழகர்சாமி
முதனிலை 2ஆம் யாண்டு,

10 முக்கணு ரீய முனிவரும் செவ்வேளும்
ஒக்க விருந்தாய்ந்த ஒண்பொருளாய்—முக்காலம்
பொங்கும் புகழ்விளங்கப் போற்றியதாய் வாழ்வதெது?
சங்கம் வளர்த்த தமிழ்.

மு. முனியாண்டி
முதனிலை 2ஆம் யாண்டு,

11 பொங்கருவி சூழ்பொதியில் நின்றருளிரும் மாமுனிவன்
எங்குமிருள் போயகலத் தந்ததூஉம்—தங்குபுகழ்ப்
பங்கமிலாப் பல்வேந்தர் பல்லாண்டு காத்ததூஉம்
சங்கம் வளர்த்த தமிழ்

சே. சரோசா
முதனிலை 2ஆம் ஆண்டு,

12 நாடெல்லாம் நாவலர்தம் நாவெல்லாம் மாநகரில்
வீடெல்லாம் மக்கள்தம் வாயெல்லாம்—ஏடெல்லாங்
கங்குல் பகலெக் கணமும்நான் கேட்பதென்றோ?
சங்கம் வளர்த்த தமிழ்

இரா. இராமச்சந்திரன்
முதனிலை முதலாண்டு,

13 ஏந்துயருங் குன்றதனில் தான்றோன்றிப் போதந்து
ஈந்துயரும் பாருலகில் இன்புகழை—ஏந்தியதே
சங்கரனார் தங்கும் தனிமதுரை மாநகரில்
சங்கம் வளர்த்த தமிழ்.

ம. மு. இராமகிருட்டினன்
முதனிலை முதலாண்டு,

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4:	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கஞ்நூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
33.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

MADRAS-600 090

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1. 2. 3. 6. 7. 8. 9. 10. 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.